DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous CC.No.35/2023

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : திரு.மாரியப்பன் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) (P.w.9)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of December 2025

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது விருதுநகர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் குற்ற பதிவேட்டு கூடத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 17.11.2016ம் தேதியன்று நரிக்குடி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது வீரக்குடியைச் சேர்ந்த ராமச்சந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி 12.00மணிக்கு கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.151/2016 பிரிவுகள் 294(பி), 506(2) இதசவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. பின்னர் வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றே 13.00மணிக்கு சாட்சிகள் துணான், வேலு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். (**அந்த பார்வை மகஜர் அசாஆ5 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ6 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). பின்னர் சாட்சிகள் ராமச்சந்திரன், பால்சாமி, சுப்பிரமணி, ராமகிருஷ்ணன், முத்தையா, துணான், வேலு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து கு.வி.மு.ச பிரிவு 161(3)–ன்படி வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்னர் 17.11.2016ம் தேதியன்று எதிரியை நரிக்குடி பஸ்டாப்பில் வைத்து 14.30மணியளவில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் புகார்தாரர் ராமச்சந்திரன் அவருக்கு சொந்தமான நிலத்தில் சுமார் ரூ.2800/– மதிப்புள்ள 7பனைமரங்களை எதிரி வெட்டி சேதப்படுத்தியது தெரியவந்ததால் ஏற்கனவே இருந்த சட்டப்பிரிவை 294(பி), 506(2) இதச விலருந்து 294(பி), 506(2), 447, 427 இதசவாக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அன்றே சேதப்படுத்தப்பட்ட 7 பனைமரங்களை ஆய்வு செய்து சேதமதிப்பீடு வழங்கிய தச்சு வேலை செய்யும் இருவர்குளத்தைச் சேர்ந்த முத்தையா என்பவரை விசாரித்து சேதமதிப்பீட்டு ரூ.2800/– அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். (**அந்த மதிப்பீட்டு அறிக்கை அசாஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இத்துடன் 23.11.2016ம் தேதியன்று எனது விசாரணை முடித்து எதிரி மீது 294(பி), 506(2), 447, 427 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எ.த.கு.வி –**

சம்பவம் எத்தனைமணிக்கு நடந்ததாக புகார் கொடுத்தார்கள் என்றால் 8.00மணிக்கு நடந்ததாக புகார் கொடுத்தார்கள். புகார்தாரர் என்ன காரணத்திற்காக அந்த புகார்மனுவினை கொடுத்தார் என்றால் தனக்கு சொந்தமான இடத்தில் உள்ள மரத்தை வெட்டியதாக புகார் கொடுத்தார். புகார்தாரர் தனக்கு சொந்தமானது என்று ஆவணங்கள் எதுவும் தாக்கல்செய்தாரா என்றால் வாய்மொழியாக தான் மனுவில் தெரிவித்திருந்தார், மற்ற ஆவணங்கள் எதுவும் தரவில்லை. ஆவணங்கள் உள்ளதா என்று விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன், வீட்டில் உள்ளது எடுத்து தருகிறேன் என்று சொன்னார். புகார்தாரரும் எதிரி உறவுக்காரர்கள் என்றால் சரிதான். அவர்களுக்குள் முன் பகை உள்ளதாக புகார் மனுவில் தெரிவித்துள்ளாரா என்றால் இல்லை. சம்பவ நாளில் எதிரி மதுரை பழங்காநத்தத்தில் தனது மகனின் படிப்பிற்காக குடும்பத்துடன் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. புகார்தாரர் எனக்கு உறவினரா என்றால் இல்லை.

2. எதிரி மீது புகார்தாரர் கொடுத்த மனுவிற்கு எதிரியை செல்போனில் அழைத்து காவல் நிலையம் வரச் சொல்லி அங்கு வைத்து அவருடைய செல்போனை உடைத்து எதிரியை கைது செய்தோம் என்றால் சரியல்ல. சேதமதிப்பீட்டு அறிக்கை எந்த தேதியில் முத்தையாவிடம் இருந்து பெறப்பட்டது என்றால் 17.11.2016ம் தேதி பெறப்பட்டது. முத்தையாவை எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் உள்ள சாட்சிகளின் வாக்குமூலத்தில் விசாரணை தேதி குறிப்பிட்டுள்ள நிலையில் சாட்சி முத்தையாவின் வாக்குமூலத்தில் மட்டும் தேதி குறிப்பிடாததற்கு காரணம் என்னவென்றால் தவறுகையால் விடப்பட்டுள்ளது. முத்தையாவை சேத மதிப்பீடு செய்வதற்கு சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்றேனா என்றால் ஆமாம். சேத மதிப்பீடு செய்யும் போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கு சாட்சி முத்தையாவை அழைத்துச் செல்லவில்லை என்றாலும்

காவல் நிலையத்திற்கு அழைத்து அவரிடம் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுள்ளதால்தான் தேதி அவரது வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. முத்தையாவின் வாக்குமூலத்தில் மட்டும் தேதி குறிப்பிடாதது அவரை முறையாக விசாரிக்கவில்லை என்று தெரிகிறது என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி 4–ன் பெயர் சோக்கு ஆகும். சோக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சி என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 4–ன் பெயர் சோக்கு இல்லை என்றால் சரியல்ல. பெயர் தவறுதலாக போடப்பட்டு யாரோ ஒரு நபரை அழைத்து விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி 3 சுப்பிரமணியன் சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சி என்றால் சரிதான். சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு சொந்தமான பனைமரத்தை புகார்தாரர் வெட்டிவிட்டு எதிரி மீது பொய்யாக புகார் அளிக்கப்பட்டதின்பேரில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை விசாரிப்பதற்கு நான் மட்டும் சென்றேனா என்றால் ஆமாம். சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் மதுரையில் இருந்தவரை காவல் நிலையத்திற்கு வரவழைத்து அவர் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எதிரியை நரிக்குடி பஸ்டாப்பில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் இருந்து அழைப்பு வந்ததினால் அங்கு வந்தவரை துன்புறுத்தி கைது செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அளிக்கும் சாட்சியம் பொய்யானது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.